*2*

# கடினமான காலங்களில் வித்தியாசத்தை ஏற்படுத்தும் விசுவாசம் (1:2-4)

வாழ்க்கைக்கான தேவனுடைய பாடத்திட்டத்தில், அவர் "சோதனை 201" என்று தலைப்புக் கொண்ட ஒரு பாடத்தைக் கொண்டுள்ளார். வகுப்பின் கூக்குரல் "பச் ..." என்பதாக உள்ளது. வகுப்பின் நிறம் கறுப்பு மற்றும் நீலம் என்பவையாக உள்ளன. "இதுவும் கடந்துபோகும்" என்பது வகுப்பின் குறிக்கோளாக உள்ளது.

சோதனை என்பது நம் எல்லாருக்கும் ஒரு பொதுவான அனுபவமாகக் காணப்படுவது இல்லையா? நடைமுறைக் கிறிஸ்தவத்தின் இந்தக் கைப்புத்தகத்தில், வாழ்வில் எதிர்கொள்ளப்படும் சிரமங்கள் என்பதே யாக்கோபு கையாளுகிற முதல் பாடக்கருத்தாக உள்ளது. கிறிஸ்தவராகுதல் என்பது வாழ்வை மிகச்சுலபமானதாக்கி, எல்லாப் பிரச்சனைகளையும் தீர்த்து வைக்கும் என்ற நவீனக் கருத்து யாக்கோபுக்கு அந்நியமானதாயிருக்கிறது.

ஹாரோல்டு குஷ்னெர் என்ற யூதத்துவ ரபீ ஒருவரால், இருதயத்தை மிகவும் அசைக்கக் கூடிய ஒரு புத்தகம் எழுதப்பட்டது. குஷ்னெர், "விரைவிலேயே வயதாகுதல்" என்ற நோயினால் துன்புற்ற தமது மகன் ஆரோனைப் பற்றிக் கூறுகிறார். குஷ்னெரும் அவரது மனைவியும், பதினோரு ஆண்டுகளாகத் தங்கள் மகன் துன்புற்றதைக் கவனித்தனர். ஆரோன் குஷ்னெர் என்ற அந்தப் பையனின் பதினான்காவது பிறந்த நாள் முடிந்து நான்கு நாட்களுக்குப் பின்னர், வயதான மனிதனாக அவன் இறந்துபோனான். இது "ஏன்" நடந்தது என்ற கேள்வியுடன் போராடிய குஷ்னெர், *நல்ல மனிதர்களுக்கு மோசமான விஷயங்கள் நடக்கும்போது* என்ற தமது புத்தகத்தை எழுதினார்.

இறையியல் ரீதியாகப் பேசுவதென்றால், குஷ்னெர் அடைகிற முடிவுகளை நான் ஒப்புக்கொள்ள முடியாது, ஆனால் நடைமுறையில் பேசுவதென்றால், அந்தக் கேள்விக்குப் பின்னால் உள்ள செயல் நோக்கத்தை நான் புரிந்து கொள்கிறேன். இதே சிந்தனையுடன் பலர் போராடி இருக்கின்றனர். நான் போராடி இருக்கிறேன் என்பதை நான் அறிந்துள்ளேன்! 1986ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில், ஏழு நாட்களில் நான், எட்டு சவ அடக்கங்களை நடத்தி அல்லது அவற்றில் பங்கேற்று இருக்கிறேன். நேசிக்கப்பட்ட ஒரு மூப்பரைப் புற்றுநோய்க்கு இழந்துபோனதுடன், எங்கள் பெண்களில் ஐந்துபேர், மிகத்துன்பமான வாகனவிபத்தில் இறந்து போயினர். (அவர்களில் மூவர் அந்த இடத்திலேயே இறந்து போயினர், மற்ற இருவரும் ICUவில் இறந்து போயினர்.) அவ்வகையான வேளைகள், ஒரு நபரை, இரவு வேளைகளில் படுத்தவண்ணம் விழித்திருந்து "ஏன்?" என்று திகைப்பு அடையச் செய்கின்றன.

*யாக்கோபு தமது நிருபத்தை, ''உண்மைநிலை சிகிச்சை'' என்று அழைக்கப்படக் கூடிய ஒரு பாடக்கருத்துடன் தொடங்குகிறார். முதலில் அவர், விசுவாசிகள் வாழ்வில் தவிர்க்க இயலாத இடர்ப்பாடுகளை எதிர்பார்க்க முடியும் என்று* அறிய *வேண்டும் என விரும்புகிறார். இரண்டாவது அவர், தேவன்மீது நாம் கொண்டுள்ள விசுவாசம் கடினமான வேளைகளில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்த முடியும் என்று நாம் அறிய வேண்டும் என்று விரும்புகிறார்.*

## சோதனைகளின் உண்மை நிலை

*2 மற்றும் 3ம் வசனங்கள், "என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும் போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்" என்று கூறுகின்றன. இவ்வசனங்களில் யாக்கோபு, சோதனைகள் பற்றிய முக்கியமான ஐந்து சத்தியங்களைத் தருகிறார்.*

### *சோதனைகள் தவிர்க்க இயலாதவைகளாக உள்ளன*

*யாக்கோபு, "நீங்கள் பலவிதமான சோதனைகளில்* அகப்பட்டால், *..." என்றல்ல ஆனால் "நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, ..." என்று கூறுகிறார் (1:2). தமது கிறிஸ்தவ வாழ்வு சுலபமாக இருக்கும் என்று எதிர்பார்க்கும் விசுவாசி அதிர்ச்சியடைகிறார். வாழ்வானது எப்போதுமே நாம் எதிர்கொள்ளச் சில இடர்ப்பாடுகளை, ஏற்படுத்தச் சில கடினமான முடிவுகளை, ஈர்த்துக்கொள்ளப்படச் சில புண்படுத்தப்படுதல்களை, அல்லது சில சுகவீனங்களை அல்லது மீளவேண்டிய சில விபத்துக்களை அளிக்கிறது. வாழ்வானது பிரச்சனைகளின் வரிசைத் தொடராக உள்ளது என்ற உணர்வை ஒருவர் பெறக்கூடும்.*

### *பிரச்சனைகள் பலவண்ணம் கொண்டுள்ளன*

*யாக்கோபு "பலவிதமான சோதனைகளில்" என்று கூறும்போது, அவர் "பலவண்ணமான" என்று மிகச்சரியாக மொழிபெயர்க்கப் பட்டிருக்கக்கூடிய ஒரு வார்த்தையைப் பயன்படுத்துகிறார். சோதனைகள் பல்வேறு வழிகளில் மற்றும் வடிவங்களில் வரக்கூடும் என்பதே யாக்கோபு அறிவிக்கும் கருத்தாக உள்ளது. வாழ்வில் நாம் கொண்டுள்ள பொறுப்புகள் ஒவ்வொன்றும், அத்துடன் இணைந்து இருக்கும் தனிப்பட்ட வகையிலான சோதனையைக் கொண்டுள்ளது. உதாரணமாக, பெற்றோராக இருத்தல் என்பது வாய்ப்பு வளத்தில் மகிமையுள்ளதாகவும் மன எழுச்சியூட்டுவதாகவும் உள்ளது, இருப்பினும் பெற்றோர் அறிந்துள்ளபடி, அது தனது சொந்த சிரமங்கள் மற்றும் சோதனைகள் என்ற அமைவைக் கொண்டுவருகிறது.*

### *சோதனைகள் முன்னுரைக்க இயலாதவையாக உள்ளன*

*2ம் வசனத்தில், ''அகப்படும்போது'' என்ற வினைச்சொல்லானது, நல்ல சமாரியன் உவமையில் இயேசு, "ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகையில் கள்ளர் கையில்* அகப்பட்டான்*" என்று கூறுகையில் பயன்படுத்திய அதே வார்த்தையாக உள்ளது (லூக்கா 10:30;* NIV*). (என்னால்*

*வலியுறுத்தப்படுகிறது.) இது, எந்த நாளிலும், நாளின் எந்த வேளையிலும், சில சோதனைகள் காத்துக்கொண்டிருக்கின்றன, அவை நம்மீது பாயத் தயாராக உள்ளன என்று யாக்கோபு கூறுவதைப் போல் உள்ளது. நம் ஒவ்வொருவரின் வாழ்விலும், பேரழிவை ஏற்படுத்தும் சோதனைகளில் சில சீக்கிரமே வரக்கூடியதாக இருக்கலாம்.*

***சோதனைகள் விசுவாசத்தைப் பரீட்சை பார்க்கின்றன***

*இது, வாழ்வில் சிரமமான, வெறுக்கத்தக்க மற்றும் பேரழிவான நிகழ்ச்சிகள் நமக்கு நடக்கத் தேவன் காரணமாகிறார் என்று கூறுவதாக இருப்பதில்லை. இது, விஷயங்கள் மோசமாகிறபோது, தேவன்மீது நாம் கொண்டுள்ள நமது விசுவாசம், நமது நம்பிக்கை மற்றும் நமது தைரியம் ஆகியவை பரீட்சைக்கு உட்படுத்தப்படுகின்றன என்று கூறுகிறது. எல்லா விஷயங்களும் நன்கு செல்லும்போது, தேவனை விசுவாசிப்பதும் அவரது வாக்குத்தத்தங்களில் விசுவாசம் கொண்டிருப்பதும் சுலபமானதாக உள்ளது. ஆனால் நீங்கள் உங்கள் வேலையை இழக்கும்போது, உங்கள் வாழ்வின் சேமிப்புகள் மோசடி செய்யப்படும்போது, உயிருக்கு அச்சுறுத்தல் தரும் ஒரு வியாதி உங்களுக்கு இருப்பதாகக் கண்டறியப்படும்போது, உங்கள் துணை உங்களை விட்டுச் செல்லும்போது அல்லது உங்கள் பிள்ளை போதைப் பொருட்களைப் பயன்படுத்துதலில் சிக்கிக்கொள்ளும்போது உங்கள் விசுவாசத்திற்கு என்ன ஆகிறது? அப்போது நீங்கள் என்ன செய்கிறீர்கள்? வாழ்வின் சோதனைகள் விசுவாசத்தை அக்கினியில் வைக்கின்றன, மற்றும் தூய்மையான விசுவாசமானது எப்போதுமே அந்தச் சூளையில் இருந்து பிரகாசமானதாகவும் பலமானதாகவும் எழும்பி வெளிவருகிறது.*

***சோதனைகள் பொறுமையை உண்டாக்குகின்றன***

*‘‘அது பொறுமையாக இருக்குமா?’’ என்பதே ‘‘விசுவாசத்தின் பரீட்சை’’யினால் பதில் அளிக்கப்படுகிற கேள்வியாக உள்ளது. ஒரு புத்தகத்தை வாசிப்பதினாலேயோ, ஒரு பிரசங்கத்தைக் கவனிப்பதினாலேயோ அல்லது ஒரு ஜெபத்தை ஜெபிப்பதினாலேயோ சகிப்புத்தன்மை அடைய இயலாது. சோதனைகள் வருகிறபோது, நாம் செய்கிற நன்மைக்குப் பலன் அளிக்கப்படாது இருப்பதால் நாம் அறிந்துள்ள நல்லவிஷயங்களில் தொடர்ந்து நிலைத்திருக்கச் சிறிதளவே கருத்துள்ளது என்று நாம் நம்பிச் சாய்கிறோம். சோதனைகள் மூலமாக என்பது மாத்திரமே, நமது வாழ்வில் பொறுமையும் பண்பும் மேம்படுத்தப்படக்கூடிய ஒரே வழியாக உள்ளது என்று யாக்கோபு கூறுகிறார். நாம் வாழ்வின் சிரமங்களினூடாக, தேவன்மீது நம்பிக்கை வைத்தவர்களாக அவருக்குக் கீழ்ப்படிபவர்களாகக் கடந்து செல்ல வேண்டும்!*

## நமது சோதனைகளுக்குப் பதில்

*ஆண்டுகளினூடே கிறிஸ்தவர்கள், யாக்கோபு 1:2ஐப் பற்றி இடர்ப்பாடு கொண்டிருந்தனர். வாழ்வின் இடர்ப்பாடுகளில் இருந்து நாம் “சந்தோஷம்” கொண்டிருக்க வேண்டும் என்று தேவன் நம்மிடத்தில் விரும்புகிறார் என்ற கருத்தைப்பற்றி நாம் இடர்ப்பாடு கொண்டிருக்கிறோம். அந்தக் கருத்து உண்மை யானது என்றால், நாம் வெளியே சென்று, நமக்கு நாமே எவ்வளவு மோசமான*

விஷயங்களை உருவாக்கிக் கொள்ளமுடியும் என்று பார்க்க வேண்டாமா? அது தேவனுடைய பண்புடன் இசைவாக இராது என்பது தெளிவு.

இவ்வசனப் பகுதியில் இருந்து, இரு கருத்துக்கள் ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டும். முதலாவது, வாழ்வின் சோதனைகள் சந்தோஷமானவைகளாக *உள்ளன* என்று யாக்கோபு கூறுவதில்லை. நமது குடும்பங்களுடன் இருத்தல், மற்ற பரிசுத்தவான்களுடன் ஐக்கியம் கொண்டும் இருத்தல், ஒரு நபர் தேவனுடைய பிள்ளையாவதைக் காணுதல் ஆகியவை "தூய்மையான சந்தோஷமாக" உள்ளன. வாழ்வின் சோதனைகள் சந்தோஷமானவைகளாக இருப்பதில்லை, ஆனால் அவற்றை நாம் சந்தோஷமானவைகளாக "கருத" ("எண்ண," KJV) வேண்டும். இரண்டாவது, "எண்ண" என்ற வார்த்தை, "சந்தோஷம்" என்பது சோதனைக்குப் பின்பு வருகிறது என்று அர்த்தப்படுகிற, ஆரிஸ்ட் வினைச் சொல்லில் உள்ளது என்று கல்வியாளர்கள் கூறுகின்றனர். ஒருவேளை நீங்கள், "வாழ்க்கை உங்களுக்கு எலும்பிச்சம்பழங்களைக் கொடுக்கும்போது, நீங்கள் எலுமிச்சம்பழச் சாற்றைச் செய்யுங்கள்" என்ற பழங்கூற்றைக் கேள்விப்பட்டிருக்கலாம். அந்த நகைச்சுவையான ஆயினும் நடைமுறைப்படுத்தக் கடினமான கூற்றானது, ஒருவகையில் யாக்கோபுவின் சிந்தனையை விளக்கப்படுத்துகிறது. வேதாகமம் முழுவதிலும், தோல்வியை வெற்றியாக்கிய மற்றும் சோதனையை வெற்றிக்கொண்டாட்டம் ஆக்கிய நபர்கள் குறித்து உதாரணத்திற்குப் பின் உதாரணமாகக் காணப்படுகிறது.

மூன்று காரணங்களுக்காக நாம், நமக்கு ஏற்படும் சோதனைகளைச் சந்தோஷமானவைகளாக "எண்ண" முடியும். அவற்றைக் கவனமாகப் படியுங்கள்:

*நாம் தனிமையாக இல்லை என்று நாம் அறிந்திருக்கும் விசுவாசத்தின் காரணமாக* நாம் சந்தோஷம் கொண்டிருக்க முடியும். நம்மோடு நமது வழிகள் யாவற்றிலும் இருக்கும் அன்பான மற்றும் வல்லமை நிறைந்த கர்த்தரை நாம் கொண்டிருக்கிறோம். இதைச் சங்கீதக்காரர் நன்கு விளக்கினார்: "நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்" (சங்கீதம் 23:4). நமது கர்த்தர் நம்மோடு இருப்பது மட்டுமின்றி, அவருக்குள் இருக்கும் நமது ஆவிக்குரிய குடும்பமும், நமது மோசமான வேளைகளில் நமக்கு உதவியாக இருக்கும். ஒரு சபையின் மூப்பர் ஒருவருடைய அறையில் அமர்ந்து கொண்டு, அவரது மனைவியை அவர் இழந்து போனதினிமித்தம் அவரை ஆறுதல் படுத்திக்கொண்டிருந்த நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகிறது. அப்போது அவர், "கிறிஸ்தவரல்லாத மக்கள் எவ்வாறு ஆறுதலைப் பெற்றுக்கொள்கின்றனர் என்று எனக்குத் தெரியவில்லை" என்று கூறினார். பல சவ அடக்கங்களை நான் நிறைவேற்றியபோது, நான் நேசித்த மக்களுக்காகச் சவ அடக்கங்களை நான் நடத்தியபோது, மற்ற பிரசங்கியார்கள் எனக்காக ஜெபிப்பதை நான் அறிவதற்காக அவர்களிடத்தில் இருந்து பல தொலைபேசி அழைப்புகளை நான் பெற்றிருக்கிறேன்.

*சோதனைகளால் பரீட்சிக்கப்படுதல் என்பது வளர்ச்சியின் காலமாகவும் இருக்க வேண்டும்.* இராபர்ட் பிரவுனிங் ஹாமில்ட்டன் என்பவர் ஒருமுறை பின்வருமாறு எழுதினார்:

> நான் சந்தோஷத்தோடு ஒருமைல் தூரம் நடந்தேன்.

*வழிநெடுகிலும் அவள் கதைத்தாள்;*
*ஆனால் அவள் கூறவிருந்த எல்லாவற்றினாலும்*
*என்னை ஞானியாக்கவில்லை.*

*நான் வருத்தத்தோடு ஒருமைல் தூரம் நடந்தேன்,*
*அவள் ஒரு வார்த்தையும் கூறவில்லை;*
*ஆனால், வருத்தம் என்னோடு நடந்தபோது*
*நான் அவளிடமிருந்து கற்றது எத்தனை விஷயங்கள்!*

அந்தச் சிறு கவிதையின் உண்மையானது திரும்பத் திரும்ப அனுபவிக்கப்பட்டுள்ளது. ஒருவர் பழைய ஏற்பாட்டைப் படிக்கையில், அதிலும் குறிப்பாக, தாவீதின் வாழ்வைப் பற்றிப் படிக்கையில், தாவீது எழுதிய சங்கீதத்தினால் சாட்சியளிக்கப்படுகிறபடி, கர்த்தருடன் தாவீதுக்கு இருந்த உறவானது, அவர் [தாவீது] பெருவருத்தத்தில் இருந்த வேளைகளில் வளர்ந்தது என்று நம்பி இணங்குகிறார்.

யாக்கோபு, நமது விசுவாசமானது மிகவும் சீர்பொருத்தமாக இருக்கவேண்டும் மற்றும் நமது பற்றுறுதியானது குறைவான தவறுடையதாக இருக்க வேண்டும் என்ற நமது இருதயத்தின் கூப்பிடுதலுக்குப் பதில் அளிக்கிறார். வாழ்வின் சோதனைகள் தேவனுடைய பரீட்சைகளாக உள்ளன மற்றும் அந்த விசுவாசமானது பலமான நிலைத்த நடைமுறையாகும் வாழ்வின் பரீட்சைகளினால் சந்திக்கப்பட வேண்டும்.

*வாழ்வின் சோதனைகள், அதிகமாய்க் கிறிஸ்துவைப் போல் இருப்பதற்கான வாய்ப்பை அளிக்கின்றன:* எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் பின்வருமாறு கூறினார்,

> ஆகையால், ... விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்; அவர் தமக்குமுன் வைத்திருந்த *சந்தோஷத்தின்* பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார் (எபிரெயர் 12:1, 2).

வாழ்வில் சோதனைகளையும் சிரமங்களையும் கொண்டிருத்தல் என்பது, தேவன் நம்மீது அன்புகூராது இருக்கிறார் என்பதைக் குறிப்பதில்லை. அது, நாம் பாவத்தினால் சபிக்கப்பட்ட ஒரு உலகத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்று அர்த்தப்படுகிறது. நாம் இயேசுவைப் போல் இன்னும் அதிகமாக இருக்கத் தீர்மானிக்க வேண்டும் மற்றும் நமது விசுவாசம் அந்த சோதனைகளில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்த அனுமதிக்க வேண்டும். யாக்கோபு, "நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது" என்று கூறுகிறார் (1:4).

## முடிவுரை

சோதனைகள், விசுவாசத்தின் மக்களுக்கு சேதம் விளைவிக்கக் கூடிய அனுபவமாக இருக்கத் தேவையில்லை. வாழ்வின் கடினமான சூழ்நிலைகளிலிருந்து கிறிஸ்தவர்கள் வளரமுடியும். வாழ்வின் சோதனைகள், ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்த விசுவாசத்திற்கு உண்மையான வாய்ப்புகளை

அளிக்கின்றன. விசுவாசம் எவ்வளவு அதிகமாய்ச் செயல்படுகிறதோ, அவ்வளவு அதிகமாய்க் கிறிஸ்தவர் பக்குவமடைகிறார்.

ஜீன் கெட்ஸ் என்பவர், *நீங்கள் சந்தேகம் கொள்ளும்படி சோதிக்கப்படும்போது தேவனை விசுவாசித்தல்* என்ற தமது புத்தகத்தில், யாக்கோபு 1:2-4ன் தன்மயமாக்கப்பட்ட பொழிப்புரையை அளிக்கிறார்:

> நான் இந்தப் பிரச்சனையை, கிறிஸ்துவுக்குள் அதிகம் பக்குவமடைதல் மற்றும் நிறைவடைதல் என்பதற்கான ஒரு வாய்ப்பாகக் கண்ணோக்குவேன். நான் இதை, நான் என்ன செய்ய விரும்புகிறேன் என்பதற்கு மாறாக, தேவன் நான் என்ன செய்ய வேண்டும் என்பதாகக் கூறுகிறாரோ, அதைச் செய்வதில் உறுதியாயிருக்க எனது திறமையை மேம்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பாகக் கண்ணோக்குவேன். நான் இந்தப் பிரச்சனையானது என்மீது மிதமிஞ்சிய அதிகாரம் செலுத்தவோ அல்லது என்னைத் தோல்வியடையச் செய்யவோ அல்லது எனது கிறிஸ்தவ வாழ்வை விட்டுவிடும்படி ஊக்குவிக்கவோ அனுமதிக்கமாட்டேன். நான் இந்தப் பிரச்சனையை, இயேசுவின் சீஷனாக நான் இருக்கிறேன் என்று எனக்கும் மற்றவர்களுக்கும் நிரூபிக்க ஒரு வாய்ப்பாகக் கண்ணோக்குவேன். நான் கிறிஸ்துவுடன் இருக்கப்போகும் நாளை நான் ஆவலுடன் முன்னெதிர் நோக்குவேன்; நான் அவருக்காக வாழ்ந்துள்ளதால், அந்த அனுபவத்தில் நிறைவான மகிழ்ச்சியுடன் பிரவேசிப்பேன். வேறு எதைக் காட்டிலும் மேலாக, நான் தேவனுக்குக் கீழ்ப்படிவேன், ஏனென்றால் நான் என்னை நேசிப்பதற்கு மேலாக அவரை நேசிக்கிறேன்.[1]

---

குறிப்புகள்

[1]Gene Getz, *Believing God When You Are Tempted to Doubt* (N.p.: Regal Books, 1983), 27-28.